THE MADURA-RAMNAD DIOCESAN MAGAZINE

SATHIAVARTHAMANI

March, 1955

CONNEMARA PUBLIC LIBRARY
18 AUG 1955
MADRAS

மதுரை-ராமநாதபுரம்

அத்தியட்சாதீனத் தீபிகை

சத்தியவர்த்தமானி

மார்ச்சு, 1955

மதுரை-ராமநாதபுரம் அத்தியட்சாதீனத் தீபிகை

பத்திராதிபர் :— A. சாமுவேல் ஐயர், செமினரி, பசுமலை,
மதுரை ஜில்லா.

உதவி பத்திராதிபர் :—C. S. தவமணி ஐயர், மண்டபம் கேம்ப்,
ராமநாதபுரம் ஜில்லா.

மானேஜர் :—கனம் ஜாஷ்வா அவர்கள், மதுரை-ராமநாதபுரம்,
அத்தியட்சாதீன பொக்கிஷதார்,
211, தெற்கு மாரட் வீதி, மதுரை.

பதிப்பாளர் :—சங்கை C. P. ஹைனமென், லினுக்ஸ் பிரஸ், பசுமலை,
மதுரை ஜில்லா.

பத்திரிகைக் கமிற்றி :—

கனம் பிரடரிக் ஜேக்கப், மதுரை.
„ தேவப்பிரகாசம் ஐயர், திண்டுக்கல்.
„ தவமணி ஐயர், மண்டபம் கேம்ப்.
„ ஜாஷ்வா, அத்தியட்சாதீன பொக்கிஷதார்.
„ A. சாமுவேல் ஐயர், பசுமலை (தலைவர்)

முக்கிய பொருளடக்கம்

1. அத்தியட்சரின் கடிதம்
2. திருச்சபைச் செய்திகள்.
3. சிறுவர் பாகம்.
4. இரக்ஷணிய யாத்திரீகனின் வழி.
5. வேத வினுக்களுக்குரிய விடைகள்.
6. இயேசுவின் ஜெபப்பள்ளி.
7. இரக்ஷணிய மனோகரம்
8. கி.மு. சங்கப் பொருட்கள்.
9. வேத வினுக்கள்.
10. விளம்பரம்.

தென் இந்திய சபையைச் சேர்ந்த
மதுரை—இராமநாதபுரம் அத்தியட்சாதீனத்தின்

சத்திய வர்த்தமானி

புஸ்தகம் XVI பசுமலை, மார்ச்சு 1955 இலக்கம் 5

வருடசந்தா: 1 ரூ. தபாற்கூலி உட்பட.

தல்லாகுளம், மதுரை,
பெப்ரவரி 15, 1955.

கிறிஸ்துவுக்குள் அன்புள்ள மக்களே :—

ஜனுவரி மீ கடைசியில் கனம் சுமித்திரா அத்தியட்சருடைய அயல சீமை ஆதீனத்தின் குருமார், மிஷனரிமார், தேவ ஊழியருக்கென்று ஐந்து நாட்களாக ஆவிக்குரிய ஒடுக்கக் கூட்டமொன்று நடத்தினேன். அங்கே செய்யப்படுகிற ஊழியத்தைப் பற்றி ஆசையாய்க் கேட்டறிந்தேன். பொதுவாகப் பாஸ்டரேட்டுகளில் செய்யப்படும் ஊழியத்திற்கும் பெண்கள் ஊழியத்திற்குமுள்ள முக்கியமான சம்பந்தத்தைக் கவனித்தேன். நமது அத்தியட்சாதீனம் படிக்க வேண்டிய சில காரியங்களில் இதுவும் ஒன்று. இந்த பெலவீனத்தைக் கடந்த ஆண்டில் சர்வேக் கமிற்றிமார் எடுத்துக் காட்டினார்கள். வருகிற வருடத்தில் மாதந்தோறும் ஒவ்வொரு பாஸ்டரேட்டுகளிலுமுள்ள சபை ஊழியர், வேதாகமஸ்திரீகள், இதர தேவ ஊழியர் அனைவரும் ஜெபம், தியானம், வேத ஆராய்ச்சி, ஐக்கியம் ஆகியவற்றில் பங்கெடுப்பதற்காக கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்படுமென நம்புகிறேன். எல்லாக் காரியங்களிலும் பூரண ஒத்துழைப்பு இருந்தாலொழிய நமது வேலையை திருப்திகரமாய்ச் செய்ய இயலாது.

பெப்ரவரி 11, 12 உ களில் வத்தலகுண்டில் ஆதாரக்கல்வி சம்பந்தமான ஓர் முக்கிய ஆலோசனைக் கூட்டமொன்று நடந்தது. தென்னிந்தியாவின் பல பாகங்களிலுமிருந்து சுமார் 60 ஆண்களும் பெண்களும் இதில் பங்கு பெற்றனர். கிறிஸ்தவதாபரிப்பிலுள்ள எல்லாப் பள்ளிகளும் ஆதாரப்பள்ளிகளாக மாறவேண்டுமெனவும், தேசீய அபிவிருத்தித் திட்டத்தில் கிறிஸ்தவ ஆதாரப்பள்ளிகள் முக்கியமான சேவை செய்யக் கூடுமெனவும் இக்கான்பரன்ஸ் திட்டமாய்க் கருதுகிறது.

பட்டாதாரிகளான ஆசிரியர்களுக்கு யாதாமொரு கிறிஸ்தவப் போதனா முறைப்பள்ளியில் ஐந்து மாதப் போதனா முறைப் பயிற்சி கொடுக்கும் திட்டம் ஒன்றை இக்கான்பரன்ஸ் செய்தது. இந்த ஆண்டிலேயே இது நடைபெறுமென நம்புகிறோம்.

மார்ச்சு 15—17 உ களில் பெங்களூரில் தென்னிந்திய ஐக்கிய சபையும் லுத்தரன் சபையும் ஐக்ய சம்பந்தமாய் நடத்தும் கூட்டங்களுக்குப் போவேன். இங்கு நடக்கும் தர்க்க ஆலோசனைகளுக்கு அதிக நேரமும் வெகு பொறுமையும் தேவை. ஐக்கியத்திற்குரிய முன்னேற்றம் அடைந்து வருகிறோம் என நம்புகிறோம் பூரண உடன் பாட்டிற்குக் கடவுள் வழி நடத்த இந்நாட்களில் எங்களுக்காக பிரார்த்திப்பீர்களென எண்ணுகிறேன்.

அத்தியட்சாதீனத்தின் பற்பல பாகங்களில் எழுப்புதல் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன ஜனுவரிக் கடைசியில் ஒரு வாரக் காலமாக அறுப்புக்கோட்டையில் சகோதரர் கனம் தானியேல் அவர்கள் கூட்டங்கள் நடத்தியது அநேகருக்கு உதவியாயிருந்தது. பங்காருபேட்டை கனம் பி. சாமுவேல் அவர்கள் மூன்று போர்டிங் பாடசாலைகளில் எழுப்புதல் கூட்டங்கள் வைத்து அநேக மாணவரைக் கிறிஸ்துவண்டை வழி நடத்தினார். கண்ணனூர் கனம் எஸ். தேவதாசன் ஐயரவர்கள் மதுரையில் பெப்ரவரி 28—மார்ச்சு 6 வரை ஆவிக்குரிய கூட்டங்கள் நடத்துவார்கள். மார்ச்சு 11—17உ வரை சகோதரர் கனம் தானியேல் அவர்களும் அவரது குழுவினரும் கொடைக்கானலில் கூட்டங்கள் நடத்துவார்கள். இப்படிப்பட்ட அநேக கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்படுகின்றன முக்கியமாய் இக்கூட்டங்களுக்காகவும், பொதுவாய் மாம்சமானயாவர் மேலும் தமதாவியை ஊற்றும்படியாகவும் நாம் வேண்டிக் கொள்வோம். சோர்ந்து போகாமல் ஜெபிப்போம். அப்போது கடவுள் நிச்சயமாய் தமதாவியின் பரிபூரணத்தை நமக்களிப்பார்.

இப்படிக்கு,
கிறிஸ்துவுக்குள் உங்களன்புள்ள ஊழியன்,
லெஸ்லி நியூபிகின்,
அத்தியட்சர்.

அத்தியட்சரின் அலுவல்கள்.

மார்ச்சு	5.	நல்லான் செட்டிபட்டி—திடப்படுத்தல்
,,	6.	பனையடிப்பட்டி—ஸ்தோத்திர விழா, திடப்படுத்தல்
,,	9—10.	மதுரை—கமிற்றிகள்.
,,	11—13.	மேடாக் அத்தியட்சாதீனம்.
,,	14—17.	பெங்களூர்—லுத்தரன் சபையோடு கூட்டம்.
,,	19.	மதுரை-அமெரிக்கன் கல்லூரி நிர்வாகக் கூட்டம்
,,	20.	நிலக்கோட்டை—திடப்படுத்தல்
		மதுரை—வேதாகம வருடாந்திர சங்கம்.
,,	21—26.	மதுரை—கமிற்றிகள்.
,,	26—28.	திண்டுக்கல், திண்டுக்கல் கிழக்கு—திடப்படுத்தல்.
31 ஏப்ரல் 1		கொடைக்கானல்.
ஏப்ரல்	2—4.	அறுப்புக்கோட்டை—திடப்படுத்தல்.

திருச்சபைச் செய்திகள்

1. சபையின் திருநாட்கள்.

ஏப்ரல்	3	குருத்தோலை ஞாயிறு
	4	பரிசுத்தவாரம்— திங்கள்
	5	,, —செவ்வாய்
	6	,, —புதன்
	7	,, —பெரிய வியாழன்
	8	,, — ,, வெள்ளி
	9	,, —சனி
	10	உயிர்த்தெழுந்த பண்டிகை
	17	உயிர். திரு. பின் ஞாயிறு 1
	24	,, ,, ,, 2
	25	பரி. மார்க்குவின் திருநாள்

2. பந்தயக் கதைப் போட்டி.

டிசம்பர், ஜனுவரியில் விளம்பரப்படுத்திய இப் போட்டிக்கு முப்பது பேர் கதை அனுப்பியிருக்கிறார்கள். மூன்றுபேர் அடங்கிய திறமைவாய்ந்த ஓர் கமிற்றி இக்கதைகளைப் பரிசீலனை செய்துவருகிறது. இதன் முடிவைக் கூடுமானால் அடுத்த சஞ்சிகையில் வெளியிடுவோம்.

3 "கிருபாகரர்" சிறுவர் விடுதி திறப்புவிழா கள்ளிமந்தயம் 11—1—55

பிற்போக்குப்பிறதேச மத்தியபாகமாகிய கள்ளிமந்தயத்தில் அனாதை, ஏழை, ஒடுக்கப்பட்ட மாணவர்கள் ஆதரிக்கப்பட்டு அவர்கள் தங்கியிருந்து படிப்பதற்காக அமெரிக்கா நண்பர் டாக்டர் Sherwood Eddy அவர்களின் நன்கொடையால் 18—4—54ல் சங்கை H. A. பாப்லி ஐயரவர்கள் ஜெபத்துடன் அஸ்திவாரக்கல் நாட்ட, எல்லாருடைய ஜெபத்தினாலும் உழைப்பினாலும் இக்கட்டிடம் முற்றுப் பெற்றது.

கிருபாகரர் விடுதிமாணவர் தேசீய உடையணிந்து மேளதாள கீத கோஷ்டியுடன் பாடசாலையிலிருந்து புறப்பட்டு, புதுக் கட்டிடம் வந்தனர். சங்கை R. R. கெய்த்தான் அவர்களால் தேசியக்கொடி சகல மரியாதைகளுடன் ஏற்றுவிக்கப்பட்டு விடுதிமாணவர்களால் கொடி வணக்கம் பாடப்பெற்றது.

வைபவம் விடுதியின் முன் அமைந்த பந்தலில் A. M. கல்லூரி போராசிரியா கனம் C. ஒயிட் அவர்களின் தலைமையில் நடந்தது. சங். கெய்த்தான் அவர்களும், திண்டுக்கல் டெப்டி இன்ஸ்பெக்டர் அவர்களும் கனம் ஆல்பர்ட் அவர்களும் சொற்பொழிவாற்றினார்கள். கூடிவந்திருந்த பெரியோர்களால் விடுதி மாணவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பண்டபாத்திரங்கள் நன்றியறிதலுடன் வரவேற்கப்பட்டது. மானேஜர் சங்கை S. தேவப்ரகாசம் ஐயரவர்களால் நன்றிகூறப்பட்டு தலைவர் முடிவுரையுடன் வைபவம் முற்றுப் பெற்றது. எல்லோருக்கும் சந்தனம் தாம்பூலம் வழங்கப்பட்டது. தேனீர் விருந்தும் அளிக்கப்பட்டது என வார்டன் ஸ்ரீ தேவதாஸன் எழுதுகிறார்.

4. வடக்கு லோக்கல் கவுன்சில் ஊழியர் ஒழுக்கக் கூட்டம் கள்ளிமந்தயம் 11—1—55.

இக்கவுண்சிலிலுள்ள எல்லா ஊழியர்களும் அன்று காலை 8½ பஸ்ஸில் தனித்தனிப் பகுதியிலிருந்து வந்து சேர்ந்தனர். பரி. நற்கருணை ஜெபத்துடன் இக்கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

சபை ஆவியின் ஜீவியத்தில் வளரவேண்டும். அனலுமின்றி குளிருமின்றி வெதுவெதுப்பாயிருந்தால் தேவன் வாந்திபண்ணிப்போடுவார். ஆகையால் வெளி. 2 : 20 கண்டபடி தேவன் நமது இருதய கதவண்டையில் தட்டிக் கொண்டிருக்கும்போதே நாம் கதவைத் திறந்து அவரை ஏற்றுக்கொண்டு சுத்த ஜீவியத்தில் வளரவேண்டும் என்று சங்கை H. A. பாப்லி ஐயரவர்களால் ஒரு எழுப்புதலான பிரசங்கம் செய்யப்பட்டது.

மதுரை அமெரிக்கன் கல்லூரி பேராசிரியர் கனம் C. ஒயிட் அவர்களால் வாலிபர்களின் சேவை அமெரிக்காவில் எவ்வாறு சபைகளுக்குள் நடக்கிறது என்பதுபற்றி

(a) ஆலய ஆராதனைக்கு வரும் பெரியோர்களை ஆசனங்களுக்கு நடத்திக்கொண்டு போவதுதான் என அனுபவ சாக்ஷியாய் சொல்லி நமது கிறிஸ்தவ வாலிபர்களும் அவ்வாறு நடக்கவேண்டும்.

(b) சுவிசேஷ ஊழியத்திலும் அனுபவமுள்ளவர்களின் ஆலோசனையைக் கேட்டு ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் சபையில் வேலைசெய்ய வேண்டும்.

(c) 10 வயதிற்குற்பட்டவர்களையும் குடும்ப விழாக்களில் பங்கெடுக்கச் செய்து பொறுப்பான வேலைகளைச் செய்ய பழக்கவேண்டும் என்றும் கூறப்பட்டது.

அமெரிக்கச் சிறுவர் எப்படி பழகியிருக்கிறார்களோ அதேபோல் கிருபாகரர் விடுதி மாணவர்களும் மண்சாந்து குழைத்தல், செங்கல் அறுப்பு முதலிய சிறு சிறு வேலைகளில் உற்சாகமாக பங்கெடுத்து செய்து வந்தனர் என்று சேர்மன் சங்கை S. தேவப்ரகாசம் அவர்களால் கூறப்பட்டது.

கனம் ஆல்ப்ரட் ஐசக் அவர்கள் ரோமர் 2 : 19ல் கிறிஸ்து நமக்கு ஒரு மாதிரி or நல்ல ஆசிரியராக நாம் வைக்கவேண்டும் எனக் கூறினார்.

(1) தெரிந்தவைகளிலிருந்து தெரியாதவைகளை விளக்கிக் கூறுகிறார். (உ-ம்) காட்டுப் புஷ்பம், விதை.

(2) கூட்டங்களுக்குத் தக்கவாறு போதனை (உ-ம்) வீடுகளில் தெருக்களில், தனித்தனி ஆட்கள்

(3) நல்ல கேள்வி கேட்கும் ஆசிரியர் (உ-ம்) "நீங்கள் என்னை யார் என்று நினைக்கிறீர்கள்"? ஆகையால் கிறிஸ்துவின் அடியார்களாகிய நாம் கிறிஸ்துவின் முன்மாதிரியைப் பின்பற்றி நடக்கிறவர்களாய் நமது ஜீவியத்தில் நடக்கவேண்டும் என்று அருமையான சொற்பொழிவாற்றினார்கள்.

சங். R. R. செய்த்தான் அவர்கள் கிறிஸ்தவன் ஒவ்வொருவனும் கிறிஸ்துவைப்பற்றி சாக்ஷி கொடுக்கிறவனாக, ஹிந்துக்களிடமும் பழகி ஜாதி துவேஷமில்லாமல் கிறிஸ்துவ சாக்ஷி சொல்லவேண்டும் என்றனர். பகல் 1 மணி போஜனத்துடன் கூட்டம் முடிந்தது எனக் கனம் வேத மாணிக்கம் சுவிசேஷகர் எழுதுகிறார்.

5. வாலிபர் செய்திகள்.

அத்தியக்ஷாதீன இளைஞர் ஊழியனின் சுற்றுப் பிரயாணங்கள்.

4, 5, 6—3—55. மண்டபசாலை, ஓய்வுநாட் பாடசாலை, வாலிபர் சங்க, தலைவர்கள் மகாநாடு.

13—3—55 ராமநாதபுரம்

20—3—55 மண்டபம் கேம்ப்.

27—3—55 ராமநாதபுரம் லோக்கல் கவுன்சில் ஓய்வுநாட் பாடசாலை, வாலிபர் சங்க தலைவர்கள் மகாநாடு.

6. தமிழ் நாட்டு கிறிஸ்தவ கௌன்சில் பொருளாதாரக் கமிட்டி.

முன்னர் M.R.C.C. என்றழைக்கப்பட்டுவந்த தமிழ் நாட்டு கிறிஸ்தவ கௌன்ஸிலோடு இணைக்கப்பட்ட பொருளாதாரக் கமிட்டியார், கொஞ்ச காலமாக பெரும்பாலும் கிராமக் கிறிஸ்தவர்கள் உருவாக்கும் குடிசைக் கைத்தொழில் சாமான்களை விலைப்படுத்தி உதவும் நோக்கத்தோடு சென்னையில் எழு ஸ்தாபனத்தை ஏற்படுத்த முயற்சி செய்து வருகின்றனர். இந்த முயற்சி விசேஷமாய் கிராம கிறிஸ்தவர்களின் விருப்பத்திற்கிணங்கி ஆரம்பிக்கப்பட்டது. பல அருமையான சாமான்கள் நமது கிராம கிறிஸ்தவர்களால் செய்யப்படுகின்றன. பனை ஓலைக் கூடைகள், பிரம்பு நாற்காலி, தட்டு முதலியவை, கயிறுகளால் செய்யப்படும் பல வகை பொருட்கள், மர பொம்மைகள், தோலினால் செய்த சாமான்கள் இவ்விதமாக பலதரப்பட்ட சரக்குகளை கிராமங்களில் தயாரிக்கிறவர்கள் சாமான்களை நல்ல விலைக்குவிற்று சரியான ஆதாயம் கிடைக்க வழியில்லையே என்று ஏக்கமுறுகின்றனர். அவர்களை உற்சாகப்படுத்தி இன்னும் சிறந்த சாமான்களை அவர்கள் செய்ய ஊக்கமூட்ட இக்கமிட்டியார் பொறுப்பேற்றுக்கொண்டுள்ளனர்.

இந்த கைங்கிரியத்துக்காக இக்கமிட்டியில் பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது திருச்சபையைச் சேர்ந்த கிறிஸ்தவ அன்பர்களும், மற்றவர்களும் வாங்கக்கூடியவர்களுக்கு கண்ணுக்கினிய நல்ல வேலைப்பாடமைந்த பொருட்களைச் செய்தனுப்ப கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். சர்க்காருடைய சகாயத்தைப் பெற்று வெளி நாடுகளுக்குக்கூட சாமான்களையனுப்ப முயற்சி செய்யக்கூடும் அப்படியே இன்னும் சிலாகிக்கக்கூடிய உலோகங்களாலான நூதன சாமான்களைச் செய்ய ஏதுவான கருத்துக்களும், உபகரணங்களும் பிறநாடுகளிலிருந்து அடைய வழிவகைகள் செய்யவும் கூடும்.

என்னென்ன சாமான்கள் செய்யப்படுகின்றன என்ற பட்டியலை திருச்சபைத் தலைவர்கள் தயாரித்து அனுப்ப விநயமாய் வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள்.

ஒவ்வொரு சரக்கும் எவ்வளவு கிடைக்கும் என்ற தகவல், விலை முதலிய விவரங்களை மாதிரிச் சாமான்களோடு சென்னையில் 9/9, Hunter's Roadல் வசிக்கும் ஸ்ரீமான் S. Thambu, B.A. என்பவருக்கு அனுப்பினால் பேருதவியாகும். நல்ல சாமான்கள் அதிகமதிகமாய் செய்ய ஆடர்கள் அனுப்பக்கூடும். குறிக்கப்படும் விலைவாசிகள் சிப்பங்களாகக் கட்ட, கூலி, ரெயில், பஸ்சார்ஜ் முதலிய எல்லா செலவுகளையும் சேர்த்து நிர்ணயிக்கப்படவேண்டும். பெப்ரவரி மாதம் 20ம் தேதிக்குள் இவைகளை அனுப்ப யாவரும் அன்பாய் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

உங்களன்பான ஒத்துழைப்பை நன்றியுடன் எதிர்பார்க்கும் நண்பன்,

காட்பாடி, பவுல் மு. கோபால கிருஷ்ணன் செயலாளர்,
5—2—1955. தமிழ்நாடு கிறிஸ்தவ பொருளாதாரக் கமிட்டி.

7. ஓய்வுநாள் பாடசாலைகளின் ஊழியம்.

1954ம் வருஷம், டிசம்பர் மாதம், 4ம் தேதி சனிக்கிழமையன்று மதுரை—பசுமலை ஓய்வுநாட் பாடசாலைகளின் சார்பாக கிறிஸ்து ஜயந்தி கீத ஆராதனை ஒன்று நடத்தப்பட்டது ஓய்வுநாட்பாடசாலை மாணவர் கேப்ரன்ஹால் போதனாமுறைப் பள்ளியில் குழுமியிருக்க, 6 : 30 மணிக்கு ஆராதனை ஆரம்பமானது. உயர்திரு கிரகரி ஐயரவர்களின் தலைமையின் கீழ் இக்கூட்டம் நடைபெற்றது. கூடியிருந்த ஓய்வுநாட் பாடசாலை மாணவ மாணவிகள் பாடல்கள்., வேதவாசிப்பு முதலியவற்றில் பங்கெடுத்து ஆராதனையில் கலந்துகொண்டனர். "துதித்தலுடனே அவர் சந்நிதிக்கு முன்பாக வந்து, சங்கீதங்களால் அவரை ஆர்ப்பரித்துப் பாடக்கடவோம், மகிழ்ச்சியோடே கர்த்தருக்கு ஆராதனை செய்து, ஆனந்த சத்தத்தோடே அவர் சந்நிதிமுன் வாருங்கள்" என்னும் சங்கீத வசனங்களுக்கு இவ்வாராதனைப் பொருத்தமாயிருந்தது.

கிராமங்களிலுள்ள ஏழைமக்களுக்கென்று ஓய்வுநாட் பாடசாலை மாணவ மாணவிகள் தங்களால் இயன்ற ஈவுகளைக் கொடுக்குமாறு ஏற்கனவே ஏவப்பட்டிருந்தனர். அதற்கிசைய ஆராதனையின்போது இப் பாடசாலைகள் தங்கள் ஈவுப் பொருட்களை, பலவர்ண விளக்குகளால் ஜோதிக்கப்பட்டிருந்த கிறிஸ்மஸ் மரத்தடியில் கொண்டுவந்து சமர்ப்பித்தனர்.

தலைமை வகித்த ஐயரவர்கள் "கிறிஸ்துவாகிய ஈவு" என்னும் பொருள்பற்றி கிறிஸ்மஸ் செய்தி கூறினார். இப்பரம ஈவின் உபயோகம், மதிப்பு; அதன்மூலம் காட்டப்பட்ட அன்பு முதலியவற்றை எடுத்துரைத்து, மனித சரித்திரத்தில் இந்த ஈவினால் ஏற்பட்ட மாறுதலையும் விளக்கமாகக் கூறினார். சிறுவர்க்கேற்ற முறையில், எளிதான நடையில் அவர்களைக் கற்பனை உலகிற்கு அழைத்துச் சென்று, ஆழ்ந்த கருத்துக்களையும் அவர்

கள் விளங்குமாறு பயன்படுத்தினர். ஆராதனை இறுதியில் கேப்ரன்ஹால் பள்ளி மாணவர் நமதாண்டவர் பிறப்பின் தொழுவக் காட்சியை மௌன ரூபக் காட்சியாக மேடையில் அளித்தனர். ஆராதனையில் நிலவிய அமைதியும் பக்தியும், சிறுவரின் ஆநந்தத் துதிகளும் கண்டவர் உள்ளத்தில் அழியாத அழுத்தங்கொண்டது, என்று கனம் தானியேல் அம்மையார் எழுதுகிறார்கள்

8. கமுதி பாஸ்டரேட் நெரிஞ்சிப்பட்டி சபையின் திடப்படுத்தல் வைபவம்.

கமுதி பாஸ்டரேட் நெரிஞ்சிப்பட்டி திருச்சபையில் புதிதாக நடந்த 1—7—54ல் கிறிஸ்துவின் மந்தையில் சேர்க்கப்பட்ட ஆத்துமாக்களில் 13 ஆத்துமாக்களுக்கு மதுரை-இராமநாதபுரம் அத்தியக்ஷர் மகாகனம் லெஸ்லி நியூபிகின் அவர்களால் திடப்படுத்தல் வைபவ ஆராதனை 6—2—55ல் நடத்தப்பட்டது.

மகா கனம் அத்தியக்ஷர் அவர்கள் மாலை 2 மணிக்கு திடப்படுத்தல் வகுப்பை ஆரம்பித்து உட்சபையில் சேருபவர்களிடம் கேள்விகளைக்கேட்டு பின்னர் திருச்சபையில் சேருபவர்களுக்கு விசேஷித்ததோர் பிரசங்கம் செய்து ஒவ்வொருவரையும் தனித்தனியே உட்சபையின் அங்கத்தினராக அபிஷேகம் செய்து, கர்த்தருடைய திருவிருந்தை பரிமாறினர். கடைசியாக திருச்சபையில் சேர்க்கப்பட்ட புது ஆத்துமாக்களுக்கு அத்தாட்சிப் பத்திரம் மகாகனம் அத்தியக்ஷர் அவர்களால் வழங்கப்பட்டது

இத்திருசசபையானது மேலும் வளர்ந்தோங்க எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக என நெரிஞ்சிப்பட்டி ஆசிரியர் கனம் ஸ்டீபன்சன் எழுதுகிறார்.

சிறுவர் பாகம்

எதிர்பாராப் பரிசு

(ஆசிரியை ஆலீஸ் வசந்தா ஆக்னீஸ், கேப்ரன்ஹால்)

இரக்கமும் தைரியநாதனும் இணைபிரியா நண்பர். இருவர்கள் ஊர் ஒரு குக்கிராமம். மூன்று மைலுக்கப்பாலிருந்த ஓர் உயர்நிலைப்பள்ளியில் படித்து வந்தனர் இரக்கம் ஓர் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவன். பெற்றோர் விவசாயிகள். எழுத வாசிக்க மட்டும் தெரிந்தவர். உத்தம கிறிஸ்தவர்கள். உண்மையான தெய்வ பக்தியுள்ளவர்கள். வெகு காலம் பிள்ளையில்லாதிருந்து, ஓயாத ஜெபத்தினால் ஒரு ஆண் மகவைப் பெற்றனர். கடவுள் அவர்கள் மீது இரங்கி இந்தக் குழந்தையைக் கொடுத்ததால் அக்குழந்தைக்கு இரக்கம் என்று பெயர் வைத்தனர் இரக்கம் பள்ளிக்குப் போகும் வயது வரை அவன் தாய் சாந்தாயி பைபிள் கதைகளை அவனுக்குச் சொல்லி வந்தாள். அவைகளைக் கேட்டுக் கேட்டு இரக்கம் ஒரு உண்மையைக் கற்றுக் கொண்டான். கஷ்டப்படுகிறவர்களுக்கு உதவி செய்

தால், அந்த உதவி கடவுளுக்கே செய்ததாகும் என்பதே அந்த உண்மை. இரக்கம் ஒரே மகனானபடியால் அவன் பெற்றோர் மிகுந்த கஷ்டத்தோடு அவனை உயர்நிலைப் பள்ளிக்கனுப்பினர். அவனும் பள்ளியில் முதல் மாணவனாகக் கற்று வந்தான். படிப்பில் மட்டுமல்ல விளையாட்டிலும் முதல்வனாக விளங்கினான். பள்ளிவிளையாட்டுப் போட்டிகளில் எல்லாம் முதற் பரிசு தவறாது வாங்கி வந்தான். அதனால் அவன் உடன் மாணவரும் ஆசிரியர்களும் அவனைப் பெரிதும் மதித்தனர். ஆண்மையின் சின்னம் வெற்றியின் இருப்பிடம் என்று வாயாரத் துதித்தனர்.

இரக்கத்தின் இணைபிரியா நண்பனான தைரியநாதன் ஒரு உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவன். அவன் தகப்பன் பெரிய அரசாங்க அதிகாரி. அவன் தாயாரும் அதிகம் படித்தவள். அவனும் படிப்பிலும் விளையாட்டிலும் கெட்டிக்காரன்தான்—ஆனால் இரக்கத்திற்குள்ள புத்திக் கூர்மையும், தெய்வ பக்தியும், உடல் வலியும் அவனுக்குக் கிடையாது. ஆனாலும் கெட்டவன் அல்லன். மிகவும் நல்லவன் இரக்கம் முதற்பரிசு வாங்குவான் தைரியநாதன் இரண்டாம் பரிசு வாங்குவான் எல்லா விளையாட்டுப் போட்டிகளிலும். இப்படியிவர்கள் இருவரும் படிப்பிலும் விளையாட்டிலும் ஒரே பற்றுடையவர்களாயிருந்த போதிலும் ஒருவர் மீது ஒருவர் பொறாமைப்படவில்லை. என்றும் நண்பராகவே விளங்கினர்.

ஒரு நாள் பல பள்ளிகளின் ஆண்டு விளையாட்டுப்போட்டி விழா நடக்க ஏற்பாடாகியிருந்தது. இவ்விரு நண்பர்களும் அதில் கலந்து கொள்ள முன் வந்தனர். அவர்கள் பள்ளி அதிகாரிகளும் எப்போதும் போலவே "இந்த ஆண்டிலும் நமது பள்ளிக்குத்தான் முதற் பரிசுகளும் இரண்டாம் பரிசுகளும் நிச்சயமாய் வரும்" என்று நம்பி இருந்தனர். போட்டி நாளும் வந்தது. மாணவரும் ஆசிரியரும் இவ்விருவரையும் "வாழ்க இரக்கம் வாழ்க தைரியநாதன். வருக வெற்றி நமது பள்ளிக்கு" என்று ஆரவாரத்துடன் வாழ்த்தினர். பள்ளி முடிந்தது. மறுநாள் விளையாட்டுப் போட்டி விழா. எல்லாரும் அந்நன்னாளை எதிர்பார்த்திருந்தனர். இரக்கமும் தைரியநாதனும் போட்டியில் கலந்து கொள்ளப் புறப்பட்டனர். இரக்கத்தின் தாய் சாந்தாயி ஜெபம் பண்ணி மகனைப் போட்டிக்கு அனுப்பினாள். நியாயமான முறையில் விளையாடி வரும்படி புத்திமதி சொல்லி அனுப்பினாள். தைரியநாதனும் பெற்றோரிடம் விடை பெற்று வந்தான். இரக்கமும் தைரியநாதனும் நடந்தே விளையாட்டுப் போட்டிக்காக வந்து கொண்டிருந்தனர்; பாதை காட்டுப்பாதை. பக்கத்தில் ரயில் பாதை. மழை தூறிக் கொண்டிருந்தது. நேரம் காலை 8 மணி.

பள்ளிக்கு அருகில் வந்தபோது ரயில் பாலம் நிறைய வெள்ளம் ஓடிக் கொண்டிருந்தது. நடை பாதைக்கும் ரயில் பாலத்திற்கும் ஐம்பது கெஜ தூரம். இரயிலின் தண்டவாளங்களுக்குக் கீழ் இருந்த கட்டைகளை வெள்ளங்கொண்டு போய்விட்டது, பாலத்தைத் தாங்கி நின்ற சுவர்களையும் காணோம். தண்டவாளங்கள் தொங்கிக் கொண்டிருந்தன. இரு நண்பரும் இந்த அபாயமான காட்சியைக் கண்டனர் இரக்கம் அதனை நேரில் பார்க்க விரும்பினான். ஆனால் தைரியநாதன் போட்டிக்கு இன்னும் கொஞ்சநேரம்தான் இருக்கிறது என்றும் அதனால் நேரே விளையாட்

டுப்போட்டிக்குப் போய்ச் சேரவேண்டும் என்றும், போகாவிட்டால் பள்ளிக்குப் பேர் கெடும் என்றும் வாதித்தான். ஆனால் அவன் ஆலோசனையைக் கேட்கவில்லை. அதனால், தைரியநாதன் இரக்கத்தை விட்டுவிட்டு விளையாட்டுப் போட்டிகருப் போய் விட்டான் இரக்கமோ ரயில் பாலத்தண்டைபோய் தண்டவாளங்கள் தொங்கிக் கொண்டிருப்பதைக் கண்டான். ஒன்பது மணிக்கு அவவழியாக விரைவு வண்டி வர இருப்பது அவனுக்குத் தெரியும் அதனால் ரயில் பாதையைப் பார்த்தான். கை இறங்கியிருந்தது. 3 பர்லாங்குத் தூரத்தில் வண்டியும் வெகு வேகமாய் வந்து கொண்டிருந்தது. வண்டியையும் வண்டியிலுள்ள ஆயிரக்கணககான மக்களையும் காப்பாற்ற விரும்பினான். என்ன செய்வதென்றே தெரியாது சில விநாடிகள் யோசித்தான். திடீரென்று ஒரு யோசனை வந்தது. வண்டி பாலத்திற்கு வருமுன் வண்டியை நிறுத்தினால் வண்டி தப்பும்— எனவே உடனே போட்டிக்காக உடுத்தியிருந்த சிவப்புப் பனியனைக் கழற்றிக் கையில் பிடித்த வண்ணமாய், தன் உயிரையுமதியாமல் தண்டவாளத்தின் வழியே ஓடினான் வண்டிககும் அவனுக்கும் நூறு கெஜ தூரம்தான் இருந்தது. சிவப்புப் பனியனை விரித்து வண்டியின் முன் தெற்கு வடக்காக வீசினான். வாயில் விரலை வைத்துத் தொடுத்து விசிலடித்தான்—நல்ல வேளையாக டிரைவர் பார்த்தான் சிவப்புப் பனியனை. உடன் பிரேக் போட்டான்—நிறுத்தினான் வண்டியை. கார்டும், டிரைவரும், மற்றவரும் இறங்கினர் கோபத்துடன்—கண்களில் தீப்பொறி பறந்தது மீசைகள் துடித்தன. இரக்கத்தைக் கோபத்துடன் கேட்டனர் பல கேள்விகள். வண்டியை நிறுத்தினதற்குக் காரணம் கூற. ஆயினும் இரக்கம் பயப்படாமல், கோபப்படாமல், காட்டினான் வெள்ளத்தாலரிப்புண்ட பாலத்தை. தொடுக்கிக் கொண்டிருந்த தண்டவாளங்களை.

பிரயாணிகளும் இறங்கி வந்து பார்த்தனர். திடீர் மழை பெய்திருக்க வேண்டும் என்றும், அதனால் திடீர் வெள்ளம் வந்திருக்க வேண்டும் என்றும், அதனால் பாலம் இடிந்திருக்கவேண்டும் என்றும் ஊகித்தனர். பிறகு பிரயாணிகளை நடைபாதை வழியாகப் போகச்செய்தனர். வேறொரு வண்டி அனுப்புமாறு அதிகாரிகளுக்குச் செய்தி அனுப்பினர். அதன்பின் இரக்கத்தைப் பலரும மெச்சிக்கொண்டனர். யார் எவர் என்று விசாரித்தறிந்து கொண்டனர். அதற்குள் மணி 12 ஆனது இரக்கம் எல்லோரிடமும் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டான் விளையாட்டுப் போட்டி விழாவிற்கு.

ஆனால் அதற்குள் விளையாட்டுப் போட்டி முடிந்து விட்டது. அவன் பள்ளிக்கு முதற் பரிசுகள் கிடைக்கவில்லை. தைரியநாதன் மட்டும் பல இரண்டாம் பரிசுகள் பெற்றிருந்தான். மாணவரும் ஆசிரியரும் எல்லாரும் இரக்கத்தின்மீது வருத்தப்பட்டனர். கோபம்கொண்டு திட்டினர். இரக்கம் அவர்கள் திட்டல்களைப் பொருள்படுத்தவில்லை. பள்ளிக்கு விளையாட்டால் வரும் பெயரிலும் சேவையால் வரும் பெயர் பெரிது என்று அவன் அறிந்திருந்த காரணத்தால்.

ஆசிரியரும், மாணவரும் போட்டிகள் முடிந்த பின் வீடு திரும்பினர். இரக்கமும் வீடு திரும்பினன்—நடந்தவையனைத்தையும் பெற்றோரிடம் எடுத்துரைத்தான்—பெற்றோர் பெரிதும் மகிழ்ந்தனர்—வழக்கம்போல் பள்ளிக்குப் போய்ப் படித்து வந்தான். பல நாட்கள் சென்றபின் ஒரு நாள் திடீரென்று ஜில்லாக் கலெக்டர் அப்பள்ளிக்கு வந்தார் தலைமை ஆசிரியரைக் கண்டு இரக்கம் யார் என்று விசாரித்தார். தலைமை ஆசிரியர் இரக்கத்தை அழைத்துக் கலெக்டருக்கு அறிமுகம் செய்தார். கலெக்டர் இரக்கத்தின் கையைக் குலுக்கி ஈராயிரம் பிரயாணிகளின் உயிரைக் காத்த உத்தமன் இரக்கம் என்று அவனை வாழ்த்தினர் அரசாங்கம் அவனது சேவையை மதித்து அளித்த வீரப்பதக்கத்தை அவனுக்கு வழங்கினர் அதனுடன் அவன் படிப்பு முடியும் வரை அவனுக்கு அரசாங்கம் பொருளுதவி செய்யும் என்றும் அறிவித்தார். பள்ளியின் பார்வையாளர் ஏட்டில் "இரக்கம் போன்ற மாணவனைத் தந்த இப்பள்ளி பாராட்டற்குரியது" என்று எழுதிக் கையொப்பமிட்டார்—இந்த எதிர்பாராப் பரிசினை இன்புடன் பெற்று மகிழ்ந்தான் இரக்கம்.

இரக்ஷணிய யாத்திரிகனின் வழி

(வித்துவான், வீ. ப. கா. சுந்தரம். பசுமலை)

" ஒரு ஊருக்குப் பல வழிகள் உண்டு. எந்த வழியிலே சென்றாலும் ஊரை அடையலாம். அதுபோல, கடவுளையடையப் பலவழிகள் உண்டு. எந்த வழியிலே சென்றாலும் கடவுளை யடையலாம்" என்று பலர் சொல்ல நாம் கேள்விப்படுகிறோம். இதைப்பற்றிச் சிந்திகக வேண்டியது நம் கடமை. ஒரு ஊருக்குப் பலவழிகள் இருக்கலாம். ஆனால் அந்த வழிகளின் தன்மை என்ன? அந்த வழிகள் எவற்றின் ஊடே செலகின்றன அவவழி செல்லுங்கால் இடையிலே நேரிடும் ஆபத்துக்கள் என்ன? அவ்வாபத்துக்களை எவவாறு மேற்கொள்வது? வழியிலே செல்லும்போது; மனத்திலே கொள்ள வேண்டிய குறிககோள் எது? கையிலே தற்காப்புக்காகத் தாஙகிச் செல்லவேண்டிய ஆயுதங்கள் எவை? இவ்வாறெல்லாம் ஆய்ந்தாய்ந்து அறிந்து, தெளிந்து ஓர் பாதையைப் பின்பற்றவேண்டும்.

மோட்ச பிரயாணி தன் முன்னே இருபாதைகளைக் காண்கின்றான். ஒன்று, விரிந்துகொண்டே செல்லும் பாதை. மற்றொன்று ஒடுங்கிக் கொண்டே செல்லும் பாதை. பிரயாணி விரிந்துகொண்டே செல்லும் பாதையை வெறுத்தான். ஏன்? அது முடிவிலே ஓர் குறித்த இடத்திற்குக் கொண்டுபோய்க் கூட்டாது. ஆதலால் அப்பாதையை விட்டு நீஙகினன்.

அவன் தேர்ந்து கொண்ட பாதை இடுக்கமான பாதை. மேலும் குறித்த இடத்திற்குக் கொண்டு போய்க் கூட்டும் பாதை அதன் வழியே செல்கின்றான். அந்த நெறி (வழி) யானது செல்லச் செல்ல நெருக்கமானது. ஊடே வழுக்கலை உடையது. செங்குத்தான சரிவுகளை உடையது. ஆதலால் நெறி பிசகாமல் போகவேண்டும். அடி தவறினல்

ஆபத்துக்குள்ளாக வேண்டும். குறி (இலக்கு) தவறினல் குப்புறவிழுக வேண்டும். ஆகையினல் சர்வ ஜாக்கிரதையாக கண்ணுங் கருத்துமாக, வழிமேல் விழி வைத்து விலகாமல் செல்லுகின்றான் வழுக்கல் நிலங்கள் ஊடே ஊடே இருந்தன. மன வயிராக்கியம் 'எனும் வைரத் தடியை ஊன்றிக் கடந்து செல்கின்றான். இனி, இப்பொருள்கொண்ட செய்யுளைப் படிப்போம்.

நெறி செலச் செல்ல நெருக்கமும் வழுக்கும்
நேரிய இறக்கமும் நெறியின்
குறிமருண்டு அயலோர் சற்றடி பிசகின்
குணிப்பரும் மோசமும் உளவென்(று)
அறிவ(ன்உ)ள் அழுங்கி அவசமுற் றனன் மற்(று)
ஆயினும் அகவியி ராக்கியப்
பொறிவ்ரி வைரத் தண்டுகொண் டூன்றிப்
போகவுங் கூடுமென் றுரைத்தான்

—3. நிதானபருவம். 2. செய்யுள்

இச் செய்யுட்குப் பதவுரை:—

நெரி செலச் செல்ல—வழியிலே செல்லச் செல்ல
நெருக்கமும் வழுக்கும்—இடுக்கமும் வழுக்கலும்
நேரிய இறக்கமும்—செங்குத்தான சரிவுகளும்
நெறியின் குறி மருண்டு—வழியின் இலக்கினை விட்டு மயங்கி.
அயல் ஓர் அடி சற்று பிசகில்.—பக்கத்தில் ஓர் அடி சிறிது விலகினல்

குணிப்ப அரும் மோசமும்—கணித்தற்கு அரிய ஆபத்தும்
உளவென்று—உள்ளன வென்று
அறிவன் உள் அழுங்கி—அறிந்தவனாகிய யாத்திரீகன் மனதில் மிக வருந்தி

அவச முற்றனன்—மயக்கம் அடைந்தனன்
மற்று ஆயினும்—அவ்வாறு அடைந்தானாயினும்

அகவைராக்கியப் பொறிவரி வைரத் தண்டு கொண்டு மன வைராக்கியம் எனும் அழகிய அறிவுவரிகளை யுடைய தண்டினைத் துணையாகக்கொண்டு

ஊன்றிப் போகவும் கூடும்—ஊன்றி(வழுக்கல் நிலம்) கடந்து போகமுடியும்

என்று உரைத்தான்—என்று (தன்னுள்ளே) கூறினான்.
கருத்து—"வழியிலே நெருக்கமும் வழுக்கலும் செங்குத்துச் சரிவுகளும் இலக்கை மறைக்கும் மோசங்களும் இருப்பினும், வைராக்கிய வயிரத்தடி ஊன்றி இவற்றைக் கடந்து செல்லலாம்" என நினைத்தான்.

இவ்வாறு பக்தன் ஆபத்தான பாதைபற்றிச் செல்லும்போது, அவனுக்கு முன்னரும் பின்னரும் என்ன நின்று துணை செய்தன? நித்திய ஜீவ மோட்ச ஆனந்தத்தை அனுபவிக்கவேண்டும் எனும் ஆசை அகத்திலே சதா நின்றது. இந்த முத்தி நகர் ஆசையே பக்தன் முன்னால் நின்று அவனை இழுத்தது. உத்தம பக்தி பின்னால் நின்று தள்ளியது. ஆசை முன்னின்று இழுக்கவும் பக்தி பின்னின்று தள்ளவும் சத்திய வேதத்தில் கூறிய தடங்களை அறிந்து அறிந்து மெதுவாக எட்டு வைத்து நடந்து சென்றான். இறைவனுடைய அருட்பலம் பெற்றவர்க்கு அரியது ஒன்று உளதோ ?

இனி இக்கருத்தைச் செய்யுளில் காண்போம்.

நித்திய ஜீவா னந்த நின்மல போகந் துய்க்கும்
முத்திவீட் டாசை பற்றி முன்னர்நின் றிழுக்க, மூண்ட
உத்தம பக்தி பின்னின் றுந்திட, ஒளிகொள் வேத
சத்திய நெறி திகழ்த்தத் தடம்பிறழாது செல்வான்.

பதவுரை :—

நித்திய—அழியாது என்றும் நிற்கும்
ஜீவஆனந்த—ஜீவனுக்கு இன்பமான
நின்மல—குற்றமில்லாத
போகம் துய்க்கும்—பேரின்பத்தை அனுபவிக்கும்
முத்தி வீட்டு ஆசைபற்றி—முத்தி நகரின் மேல்கொண்ட ஆசையானது பிடித்து
முன்நின்று இழுக்க—முன்னே இருந்து இழுத்துச் செல்ல
மூண்ட உத்தம பக்தி—இதயத்தில் தோன்றி எழுந்த உன்னத பக்தியானது

பின்நின்று உந்திட—பின்னால் இருந்து தள்ளிட,
ஒளிகொள் வேத சத்திய நெறி திகழ்த்த—பிரகாசம் பொருந்திய வேதம் கூறும் சத்திய வழியில விளங்கிய
தடம் பிறழாது செல்வான்—தடத்தை பிசகாது பின்பற்றிச் சென்றான்.

இனி, யாத்திரீகன் சென்ற செலவையும் அவன் வழியையும் நம் வாழ்க்கையோடு பொருத்திச் சற்று சிந்தித்துப் பார்ப்போமாக. நம்முடைய தினசரி ஜீவியத்தில் நாம் இடுக்கமான வழியைத் தெரிந்து கொண்டோமா ?

அல்லது அழிவுக்கு அழைத்தேகும் அகன்ற பாதையைத் தெரிந்து கொண்டோமா ? இடுக்க வழியில் என்னென்ன இடர்ப்பாடுகள் நேரிடுகின்றன ? எத்தனை பண ஆசை' பதவி ஆசை! அதிகார ஆசை! வீண் பொறாமை, வீண் கர்வம்! இவையே வழியில் வரும் வழுக்கல் இறை அருட் பலம் துணையாகக் கொள்ள வேண்டும். சோதனைகள் வருங்கால் வைராக்கியத் தண்டு ஊன்றிச் செல்ல வேண்டும். நம்மை முன்னால்

பிடித்திழுக்கின்றது எது? முத்தி வீட்டு ஆசை முன்னல் பிடித்திழுக்கின்றதா? பிரியமும் பக்தியும் பின் நின்று தள்ளுகின்றனவா? நாம் எடுத்து வைக்கும் காலடித் தடங்கள்? சத்திய வேதத் தடங்களா? உலகப் பற்றுக் கொண்டோர் நடந்த தடங்களா?

ரட்க்ஷணிய யாத்திரீக நேசர்களே! கிருஷ்ண பிள்ளையிடம் பற்றுக் கொண்ட அன்பர்களே!

மோட்ச பிரயாணியின் பாதையையும் அவன் பட்ட பாட்டையும் கவிஞர் 5000 செய்யுட்களிலே வர்ணித்துச் செல்கின்றார். பெரிய நூலை வாங்கி வாசித்து இன்புறுங்கள்.

——— வாழ்க கிருஸ்தவ இலக்கியம்—

——— வளர்க தமிழ் இன்ப அறிவு—

வேதவினாக்களுக்குரிய கேள்விகள்.

1. *எரிகோ—உபா.* 34: 3
2. *நீதிமொழிகள்* 6: 6-8
3. *லூக்.—நியாயாதிபதிகள்* 1: 23
4. *தீத்து—காலத்தியர்* 2: 1-3
5. *எரேமியாவின் புலம்பல்.*
6. *உடன்படிக்கைப் பெட்டி—1 சாமு* 6: 12
7. *நாத்தான்—1 ராஜா* 1: 10-14
8. *எரேமியா தீர்க்கதரிசியின் பிறப்பிடம்—எரேமியா* 1: 1
9. *எசேக்கியேல்* 1: 1; *தானியேல்* 1: 1-6
10. *ஏனோக்—ஆதி* 5: 22
11. *காபிரியேல்—லூக்கா* 1: 19, 26
    மிகாவேல்—வெளி 12: 7
12. *சேலா வரும் இடத்தில்*

    a. *வார்த்தையாலோ வாத்தியத்தாலோ உச்சஸ்தாயில்தொனிப்பது*

    b *சிலர் அது வரும் இடத்தில் மௌனமாய் இருத்தல் என்று சொல்லுகிறார்கள்.*

இயேசுவின் ஜெபப்பள்ளி

பதினேழாம் பாடம்

"நீர் எப்பொழுதும் எனக்குச் செவிகொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன்."

அல்லது

கடவுள் தன்மைக் கிசைந்த ஜெபம்.

"பிதாவே, நீர் எனக்குச் செவிகொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். நீர் எப்பொழுதும் எனக்குச் செவிகொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன்" (யோவான் 11 : 41, 42) "நீர் என்னுடைய குமாரன், இன்று நான் உம்மை ஜநிப்பித்தேன். என்னைக் கேளும் அப்பொழுது உமக்குக் கொடுப்பேன்"

(சங் 2 : 7, 8)

விசுவாசமும், அறிவும் வேறுபடுத்தப்பட்டிருப்பதைப் புதிய ஏற்பாட்டில் காண்கிறோம் "ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும், அருளப்பட்டிருக்கிறது". (1 கொரிந்தியர் 12 : 8, 9.) ஒரு குழந்தைக்கு அல்லது குழந்தைப் பருவக் கிறிஸ்தவன் ஒருவனுக்கு அறிவு இல்லாத அதிக விசுவாசம் இருக்கலாம். குழந்தை உள்ளம் படைத்த ஒருவன் சத்தியத்தைத் தடையின்றி ஒப்புக்கொள்ளுகிறான். "கர்த்தர் சொன்னார். ஆகையால் நம்புகிறேன்" என்பதைத்தவிர அவன் வேறு காரணம் சொல்லமாட்டான். ஆயினும் முழுஇருதயத்தோடுமட்டுமல்லாது, முழுமனதோடும் கடவுள்மீதன்பு கூரவும் அவருக்குப் பணிபுரியவும் வேண்டும் என்பதும், தேவனுடைய ஞானத்திலும், அவரது வழிகளிலும, வார்த்தைகளிலும், செயல்களிலும் நாம் உள்ளுணர்வு பெறவேண்டும் என்பதும் கடவுளுடையசித்தம் . இவ்விதமாகத்தான் விசுவாசி கடவுளுடைய கருணையின் மகத்துவத்தை, மகிமைப்படுத்த முடியும் இவ்விதமாகத்தான், இரகசியப்பில் அடங்கியுள்ள ஞானம், அறிவு ஆகிய பொக்கிஷங்களை இருதயமானது புத்திக்கூர்மையுடன் கிரகித்துக் கொள்ளமுடியும். கர்த்தருடைய ஞானமும் அறிவுமாகிய ஐசுவரியங்களின் ஆழமே! என்று சிங்காசனத்தின் முன் எழும்புகிற உன்னதமான பாட்டைப்பாடும்படியும் நாம் ஆயத்தம் பண்ணப்படுவோம்.

இந்தச் சத்தியம் நமது ஜெப ஜீவியத்திற்கு முற்றும் பிரயோஜனமானது. எளிய விசுவாசியும் வல்லமையோடு ஜெபிக்கமுடியும். ஆயினும் ஜெபத்தைப்பற்றிய கிறிஸ்தவ விஞ்ஞானத்தில் அறியப்பட

வேண்டிய ஆழ்ந்த பிரச்சினைகள் அதிகம் உண்டு. எம்மட்டும் ஜெபத்தின் வல்லமை உண்மையானது? அப்படிப்பட்ட வல்லமையை கடவுள் ஜெபத்திற்கு எப்படிக் கொடுக்கக்கூடும்? கடவுள் சித்தத்தோடும், தீர்மானங்களோடும், ஜெபத்தை எப்படி ஒன்றுபடுத்த முடியும்? கடவுளுடைய ஆளுகையையும் நமது சித்தத்தையும், கடவுளுடைய உரிமையையும் நமது உரிமையையும், எப்படி ஒப்புரவாக்கமுடியும்? இவைகளும் இவைபோன்ற மற்ற கேள்விகளும் ஒரு கிறிஸ்தவனின் சிந்தனைக்கும, தியானத்திற்கும் ஆராய்ச்சிக்கும் தகுதியான பொருள்களாகும். இவற்றை உண்மையோடும், பயபக்தியோடும நாம் ஆராயும்போது, ஜெபத்தில் கடவுள் எவ்வளவு வல்லமையை மனிதருக்குக் கொடுத்திருக்கிறார் என்பது தெளிவாகும்.

கடவுள் சம்பூரணர். சுயம்புவானவர். ஆதியந்தமில்லாதவர். அவரது முடிவேமுடிவு. அப்படியிருக்க, அவர் சித்தத்திற்கு மாறாக அவர் செய்யும்படி ஜெபம எப்படி அவர்மீது கிரியை செய்யும்? ஜெபத்திற்குப்பதில் தருவேன் என்ற வாக்குத்தத்தம நமது பெலவீனத்தின் காரணமாகக் காட்டப்படும் பட்சமன்றோ? கடவுள் சுயம்புவானவர். தாமே சகலத்தையும் செய்பவர். பிறர் உதவி தேவையற்றவர். எனவே அவர்மீது ஜெபத்திற்கு வல்லமை உண்டா?

இவற்றிற்கு திரித்துவத்தில் தான் விடை காணவேண்டும். கடவுள் சுயம்புவான ஒரே ஒரு ஆளாயிருந்தால் அவர்மீது செல்வாக்குச் செலுத்த முடியாது. ஆனால் கடவுள் திரியேகர், பிதா குமாரன் பரிசுத்தாவி. நித்திய அன்பானது குமாரனைப் பெற்றபோது, தமக்குச் சமமானவராகவும், நமது ஆலோசனைக் கர்த்தாவாகவும், இருக்கும்படி தமக்கு அடுத்தபடியான இரண்டாம் ஆளாயிருக்கும்படி பிதா குமாரனுக்கு உரிமை தந்தார். எனவே திரித்துவத்திலேயே ஜெபத்திற்குக் கதவு திறக்கப்பட்டது. பூமியில் போலவே பரத்திலும பிதாவுக்கும் சுதனுக்கும் உள்ள தொடர்பு கொடுப்பதும் பெற்றுக்கொள்வதுமாகிய தொடர்பாயிருக்கிறது கொடுப்பதைப்போலவே பெற்றுக்கொள்வதும் சுயேச்சையானதும் சுயமாய்த் தீர்மானிக்கக் கூடியதுமாயிருந்தால், குமாரனுக்குக் கேட்பதும் பெற்றுக்கொள்வதும் இருக்கவேண்டும தெய்வீக ஆட்களின் பரிசுத்த ஐக்கியத்தில் குமாரன் கேட்டுக்கொள்வது மும்முறை ஆசீர்வதிக்கப்பட்ட கடவுள் வாழ்க்கையின் பலத்த செயல்களில் ஒன்றும். இதனாலேயே 2ம் சங்கீதத்தில், "நீர் என்னுடைய குமாரன். இன்று நான் உம்மை ஜநிப்பித்தேன். என்னைக்கேளும் அப்பொழுது உமக்குக் கொடுப்பேன்". என்று சொல்லப்பட்டிருக்கிறது. தமமீது செல்வாக்குச் செலுத்தும ஸ்தானத்தை பிதாதமது குமாரனுக்குத் தந்தருளினார். பிதாவிடம் குமாரன் கேட்பது வெறும்

நிழலல்ல அல்லது நடிப்புமல்ல, அதில்தான் பிதாவின் அன்பும் குமாரனின் அன்பும் ஒன்றோடொன்று சந்தித்து ஒன்றையொன்று பூரணப்படுத்தினது. தமது ஆலோசனைகளில் பிதா தனித்திருக்கச் சித்தம் கொள்ளவில்லை கேட்கவும் பெற்றுக்கொள்ளவும் குமாரன் இருக்கும்படி கடவுள் சித்தம் கொண்டார். எனவே கடவுளின் தன்மையிலேயே ஜெபத்திற்கு இடம் உண்டு இதனை அறிந்தவராக வே இயேசு "நீர் எப்பொழுதும் எனக்குச் செவிகொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன்" என்று கூறினார். பூமியிலிருக்கும் இயேசுவின் குமாரத்துவம் பரத்திலிருக்கும் குமாரத்துவத்திலிருந்து எப்படிப் பிரிக்கப்பட முடியாதோ, அப்படியே பூமியிலே அவர் செய்யும் ஜெபமும் பரத்தில் அவர் செய்யும் ஜெபத்தின் நகல் ஆகும். கிறிஸ்து இயேசுவாகிய மனிதனின் ஜெபமே, பிதாவின் மடியிலிருக்கும் ஒரேபேறான குமாரனின் ஜெபத்தையும், பூமியில் மனிதர் செய்யும் ஜெபத்தையும் இணைக்கும் சங்கிலிக் கண்ணி. ஜெபத்தின் உற்பத்தி கடவுளின் தன்மையிலேயே இருக்கிறது. குமாரன் கேட்பதும் பிதா பதில் கொடுப்பதும் ஆகிய ஜெபத்தினாலன்றி வேறெதனாலும் எதுவும் ஏற்படாது.

குமாரன் மூலமாகச் செய்யப்படும் மனிதனுடைய ஜெபம் கடவுள் மீது எவ்வாறு கிரியை செய்யும் என்பதை அறிய இவ்விளக்கம் சிறிது பயன்படலாம். குமாரன் இல்லாமலோ, அவரது விண்ணப்பமில்லாமலோ அல்லது அவர் மூலமாகச் செய்யப்படும் ஜெபமில்லாமலோ கடவுள் சுயமாகத் தீர்மானங்கள் செய்வதில்லை. "இயேசு கிறிஸ்து முதற்பேறானவர். எல்லாவற்றிற்கும் தலையானவர் எல்லாவற்றிற்கும் சுதந்திரவாளியானவர். அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது. சகலமும் அவரைக்கொண்டும அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது. எல்லாம அவருக்குள் நிலைத்திருக்கிறது." (கொலோ 1: 15-18). பிதாவின் ஆலோசனைகளில், எல்லாச் சிருஷ்டிகளின் பிரதிநிதியாக குமாரனுக்கு உரிமை உண்டு பிதாவின் நித்திய தீர்மானங்களில் மத்தியஸ்தராகவும் பரிந்துபேசுகிறவராகவும் இருக்கும் உரிமை குமாரனுக்குண்டு. அவ்வாறே குமாரன்மூலம் செய்யப்படும் சகல ஜெபமும் பிதா கேட்பார்.

மாற்றமற்ற தெய்வ தீர்மானங்களைச் சுதனின் உரிமையும் வல்லமையும் பாதிக்காதா? என்று கேட்கலாம். இதற்கு விடை எளிது. மக்களுக்கே உரிய இறநதகால, நிகழ்கால, எதிர்காலக் கட்டுப்பாடு கடவுளுக்குக் கிடையாது. ஏனெனில் அவர் காலத்திற்குட்பட்டவரல்லர். அவருக்கு இறந்தகாலம் என்றும், எதிர்காலம் என்றும் இல்லை. அவர் நித்தியர் ஆதியந்தமற்றவர். எப்பொழுதும் இருக்கிற இப்பொழுதே நித்தியம். (Eternity is an ever—present Now) அதில் கடந்த காலம் கடந்துபோகவில்லை.

எதிர்காலம் எப்பொழுதும் நிகழ்காலம். நமது மனித பலவீனங்களுக் கேற்றவாறு, வேதம் கடந்தகால தீர்மானங்கள் என்றும் வருங்கால நிகழ்ச்சிகள் என்றும் நாம் விளங்கிக்கொள்ளுமாறு கூறுகிறது. ஆனால் உண்மையில், மாறாத தன்மையுடைய கடவுளுடைய தீர் மானங்கள் அவர் சித்தப்படி செய்யும் அவரது உரிமைக்கு இசை வாகவே இருக்கின்றன. எனவே குமாரனின் மூலமாய் வரும் ஜெபத்திற்குப் பிதா செவிகொடுக்கிறார்.

தெய்வ ஆளுகைக்கும் மனித உரிமைக்கும் உள்ள பரிபூரண ஐக்கியத்தின் மறைபொருள் நம் அறிவுக்கெட்டாதது. ஏனெனில் கடவுள் நித்தியராயிருப்பதால் நமது எண்ணங்கள் யாவையும் கடந்து செல்கிறார். ஆனால் ஒன்றுமட்டும் நிச்சயம். அதாவது குமாரனில் ஜெபத்தின் மூலம் நாம் ஐக்கியப்படுகிறோம். குமாரன் பிதாவோடு நித்தியமாக ஐக்கியப்பட்டிருக்கிறார். ஆதலால் குமாரன் மூலம் செய்யப்படும ஜெபத்திற்கு திரித்துவமாயிருக்கிற கடவுள் மீது செல்வாக்குச் செய்யும் வல்லமை நிச்சயமாயுண்டு. கடவுள் தீர்மானம் மனித ஜெபத்தால் மாற்றப்பட முடியாத உருக்குத் தீர்மானமல்ல. கடவுள் ஜீவனுள்ள அன்பு. "ஒரே ஆவியினாலே பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியத்தை அவர் மூலமாய்ப் பெற் றிருக்கிறோம்" (எபேசி. 2 : 18)

குறிப்பு : இது ஒரு மிகவும் கடினமான பாடம். ஜெபததோடு படிக்கவும். இந்தப்பாடத்தில் திரித்துவம் அதிகம் இடம பெற்றிருக் கிறது. மனித அறிவுக்கு எட்டாதது திரித்துவம். எனவே இப்பாடத் தைப் படிக்கும்போது, மகாகனம் நியுபிகின் அத்தியட்சர் அவர்கள் சமீபத்தில் வெளியிட்டுள்ள "பாவமும் இரட்சிப்பும்" என்ற நூலில 6ம் அதிகாரத்தில் காணப்படுகிற திரித்துவத்தைப்பற்றிய குறிப்புக் களையும் இத்துடன் சேர்த்து ஆராய்ந்தால் நல்ல பலன் கிடைக்கும்

இரக்ஷணிய மனோகரம்—குமாரானுபூதி (முடிவு)

47 பொல்லேன் இவன் என்று புறக்கணியாது
எல்லாம் நலமாக்கி இரக்ஷணிய
நல்லாறு பிடித்து நடத்தினை என்
சொல்லால் அடங்காது சுராதிபனே.

சுராதிபனே=சுர + ஆதிபனே=விண்ணவர்க்கு இறைவனே! பொல்லேன் இவன் என்று=பொல்லேனாகிய என்னை இவன் பொல்லாதவன் என்று; புறக்கணியாது=தள்ளி விடாமல்; இரக்ஷண்ய நல் ஆறு பிடித்து நடத்தினை=இரக்ஷிப்பின் நல்ல வழி யில் கொண்டுவந்து சேர்த்தாய்; என் சொல்லால் அடங்காது= (எனக்கு நீ செய்த நன்மையை) என்னால் சொல்லிமுடியாது.

48 குருதிக்கனைக்கொண்டு குணித்தாய்=ஏசுவின் திரு உதிரத்திற்குத் தொண்டனாக என்னைக் குறித்தாய்; அடியேன் பிணித்தாய்=அடியேனை வேறு நெறியில் செல்லாமல் தடுத்தாண்டாய்; பிணித்து=அவ்வாறு தடுத்து; ஈர் இரு பான் வருடம்=இரு இருபது (நாற்பது) வருஷம்; நணித்து ஆயது=ஏறக்குறைய ஆயிற்று; நாயக=இறைவனே; நாய் அடியேற்கு அணித்தாய்=நாய்போன்ற அடியேனுக்கு அருகே வந்து; வினை தீர்த்தருள்=என் பாவந்தனைத் தீர்த்தருள்; அச்சுதனே=அழிவில்லாதவனே.

49 எங்குமசுவிசேஷ இரும் சுடரே
பொங்கிப் பொலியத் தருமம் புவியில்
துங்கச் சபை=துய்க்க நல் ஆவியருள்
செங்கோல் உலகைச் செயம் கொள்ளுகவே.

சுவிசேஷ இரும் சுடர்=சுவிசேஷமாகிய பேரொளி; எங்கும்=உலகெங்கும்; பொங்கிப் பொலிய=மிகுந்து விளங்கவும்; புவியில்=இவ்வுலகிலுள்ள; துங்கச் சபை=திருச்சபையானது; தருமம=கிருஸ்துவின் புண்ணியத்தை; துய்க்க=அநுபவிக்கவும்; நல் ஆவி அருள்=பரிசுத்த ஆவியை அருள்வாயாக; செங்கோல்=நீதியான ஆட்சியான நூல்; உலகை=உலகம் முழுவதையும்; செயம் கொள்ளுக=ஆட்கொள்வதாக.

50 உண்மைத் திருவாக்கு ஒளி ஞானம் எனு
எண்மெய்க்குணம் மல்கிய ஈசனில் வந்து
ஒண்மைச் சுடராய் உய்ய நிகழ்
வண்மைப் பொருள் வாழிய வாழியவே.

உண்மை, திருவாக்கு, ஒளி, ஞானம் எனு=சத்தியம், திருவார்த்தை, ஒளி, ஞானம் என; எண்=மேலாக மதிக்கப்படும்; மெய்க்குணம் மல்கிய=உண்மைக் குணங்கள் நிறைந்த; ஈசனில்=இறைவனிலிருந்து; வந்து=தோன்றி; உலகு உய்ய=உலகம் ஈடேறும்படி; ஒண்மைச் சுடராய்=ஒளிமிக்க சுடராக (சூரியனாக); நிகழ்=வழங்குகின்ற; வண்மைப் பொருள்=தியாகமூர்த்தியாகிய குமாரன் வாழிய, வாழிய=வாழ்க, வாழ்க.

கி. மு. சங்கப் பொருட்கள்—மார்ச்சு, 1955.

யூத மார்க்கத்துக்கு எதிராக கிறிஸ்துவம்.

மார்ச்சு 1 இரட்சிப்பு லூக். 2 : 25-32
2 "யூதருக்கு இடறல்" லூக். 2 : 21-30
3 யூதருடைய இராஜா மாற். 15 : 9-26
4 முதன் முதலில் யூதருக்கு ரோ. 1 : 13-17
5 யூதனைப்பற்றிக்கொள் சகரியா 3 : 18-23
6 யூதமார்க்கத்துக்கெதிராக கிறிஸ்துவம் கலா. 3 : 1-29

தற்பிரதிஷ்டை (1) என் ஜீவன்
(2) என் கரங்கள்

மார்ச்சு 7 தேவனுடைய கரங்கள் நெகே. 2 : 1-20
8 இயேசுவின் கரங்கள் மத்தேயு 8 : 1-4
9 இயேசுவின் கரங்கள் மாற்கு 6 : 1-6
10 இயேசுவின் கரங்கள் லூக்கா 4 : 40-44
11 இயேசுவின் கரங்கள் யோவான் 20 : 19-23
12 கிறிஸ்தவனின் கரங்கள் (பேதுரு) அப். 3 : 1-10
13 'எந்தன் ஜீவன் கரங்கள் சொந்தமாக ஆளுமே' யாத். 3 : 1-9

ஒரே மெய்யான ஜீவிய பிரமாணம்

மார்ச்சு 14 ஒரேபிலே செய்யப்பட்ட உடன்படிக்கை யாத். 5 : 1-21
15 தேவனுடைய வல்லமையான வாக்குத்தத்தங்கள் யாத். 4 : 27-35
16 தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே ஏற்பட்ட உடன்படிக்கை புதுப்பிக்கப்பட்டது யோசுவா 24 : 14-28
17 கிறிஸ்துவும் உடன்படிக்கையை நிறைவேற்றுகிறார் மத்தேயு 4 : 1-11
18 விக்கிரக வணக்கத்துக்கு விரோதமான எச்சரிப்பு 1 யோவான் 5 : 11-21
19 ஒரே மெய்யான தெய்வம் வெளி. 19 : 5-16
20 ஒரே மெய்யான ஜீவிய பிரமாணம் யாத். 20 : 1-17

1. ஒரே மெய்யான ஜீவிய பிரமாணம்
2. வேறே பிரமாணம் இல்லை

21 கீழ்ப்படிவோருக்கு தேவனுடைய வாக்குத்தத்தங்கள் யாத். 23 : 20-25
22 விக்கிரக வணக்கத்துக்கு விரோதமாக தேவ கோபம் சங். 78 : 56-58
23 "விக்கிரகங்களை உருவாக்குகிற யாவரும் வீணர்" ஏசாயா 44 : 6-18
24 கிறிஸ்தவர்களே முன்மாதிரி 1 கொரி. 10 : 7, 16-22
25 புறஜாதியாரின் பாவம் ரோமர் 1 : 16-32
26 சுயநலக்காரரின் முடிவு மத். 23 : 34-39
27 ஒரே ஜீவிய பிரமாணம் } யாத். 20 : 4-6 and
(2) வேறு பிரமாணம் இல்லை } ஏசாயா 46 : 1-13

எதிர்கால நோக்கு (1) ஜெபத்தில்

28 தேவனிடத்தில் வல்லமை உண்டு ஆதி. 32 : 24-32
29 மீட்பு தீர்மானிக்கப்படுகிறது யாத். 3 : 1-10
30 இஸ்ரவேலருக்கு இரட்சிப்பு நியா. 6 : 11-16
31 உலக முழுவதற்கும் சாட்சி அப். 1 : 6-15

தல்லாகுளம் } 8—2—55 }

சா. ஜூலியஸ்,
அத்தியக்ஷாதீன இளைஞர் ஊழியர்

பாலியர் ஞாயிறு ஆராதனை

(இயற்றியவர் ட. செல்வநாயகம் ஆசிரியர், உத்தமபாளையம்)

(செந்தமிழ் நாடென்னும் போதினிலே என்ற மெட்டு.)

நோக்கம்

1. மதுரை ராமநாடத்தியட்சாதீன
மாவட்ட மாமிந்த நாட்டினிலே
புதுமையான நல் பாலியர் ஞாயிறை
புகுத்த நோக்கம் நாம் கேட்போமே

2. நமது பிள்ளைகள் நாளுக்கு நாளாக
நல்ல உபதேசம் பெற்றுயர்ந்து
தமது சாயலைத் தாமடைந்து தேவன்
தரும் ஆசீர் வாதம் பெற்றிடவே

3. சத்திய வேதத்தைத் தாகமாய் வாசித்து
துத்திய கீர்த்தனைகள் பாடி
நித்தம் ஜெப தபம் செய்து அவர்க்கேற்ற
உத்தம பிள்ளை களாகிடவே

பெற்றோர்; ஞானத்தாய்தந்தை கடமை

4. இந்தவிதமாய் வளர்ப்போமென்று தீட்சை
தந்திடும் நாளிலே வாக்குச் செய்த
தந்தை தாய் ஓர் ஞானத்தந்தையும் தாயரும்
சிந்தித்து மாதிரி காட்டிடுவோம்.

மற்றவர் கடமை

5. பெற்றோர்க்கு மட்டும் கடமை யென்றுவீணில்
விட்டுவிடாதிந்தப் பிள்ளைகளை
மற்றும் பெரியோர், குருமார் அனைவரும்
உற்றுக் கவனம் எடுத்திடுவோம்.

6. ஓய்வுநாள் பள்ளியும் பாலர்கள் ஞாயிறும்
ஒதுக்கி வைத்த ஓர் நோக்கமிதே
தாய் தந்தையரும் சபைத்தலைவர்களும்
தக்கமுயற்சி எடுத்திடுவோம்.

7. பாலியர் பக்தி முயற்சி சங்கம் பரி
பாலித்து நன்று விளங்கிடவே
வாலிபர்களும் சுயேச்சை யூழியரும்
மேலுமுயன்று உழைத்திடுவோம்

பாலியர் சங்க ஸ்தாபகர்

8. ஆதியில் பாலியர் பக்திவிருத்திக்கு
அஸ்திபாரமாகவே யிருந்த
பாதிரி கிளார்க்குப் பண்டிதருடைய
மாதிரி பின்பற்றி வாழ்ந்திடுவோம்

அத்தியட்சாதீனத்திற்காக ஜெபம்

9. இந்த விதமான ஏற்பாடுகள் செய்து
தந்த நம் அத்தியட்சாதீனம
நந்தா விளக்கென நாளும் விளங்கிடச்
சிந்தையில் எண்ணி ஜெபித்திடுவோம்

வேத வினாக்கள்—மார்ச்சு

(கனம் செல்வம் டெயிலர் அம்மாள், வேதப்பாடசாலை, பசுமலை)

1. "பேரீச்ச மரங்களின் பட்டணம்" என்பது எது?
2. எறும்புகளின் சுறு சுறுப்பைப்பற்றி எங்கே வாசிக்கிறோம்?
3. பெத்தேலின் பழைய பெயர் என்ன?
4. கிறிஸ்து மார்க்கத்தைத் தழுவிய எந்த கிரேக்கனை பரி. பவுல் எருசலேமுக்கு கூட்டிச் சென்றார்?

5. எருசலேமின் முற்றுகை விழுதலைப்பற்றிய விபரம் எந்தப் புஸ்தகத்தில் வருகிறது ?
6. நடத்துகிறவன் இல்லாமல் எதை இரண்டு பசுக்கள் இழுத்துச் சென்றன ?
7. தாவீதின் காலத்திலுள்ள பெரிய தீர்க்கதரிசி யார் ?
8. ஆனதோத் பட்டணத்தின் முக்கியம் என்ன ?
9. பாபிலோன் சிறையிருப்புக் காலத்தில் வசித்த பெரிய தீர்க்கதரிசிகள் யார் ?
10. மெத்துசலாவின் தகப்பன் யார் ?
11. எந்த இரண்டு பிரதான தூதரைப்பற்றி வேதத்தில் வாசிக்கிறோம்.
12. சங்கீதங்களில் காணப்படும் சேலா என்ற பததிற்கு அர்த்தம் என்ன ?

(குறிப்பு:— விடைகளுக்கு மற்றொரு பக்கம் பார்க்கவும் ப—ர்)

PUBLIC LIBRARY
1955
MADRAS

Lenox Press, Pasumalai, 23 – 2 —'55 474 C

விளம்பரம்

இராமநாதபுரம் பரிசுத்த மார்ட்டின் ஆஸ்பத்திரியில் மருத்துவப் பயிற்சி பெறுவதற்காக அப்ளிக்கேஷன்கள் ஒவ்வொரு வருஷமும் மார்ச்சு ஏப்ரல் மாதங்களில் தான் பெற்றுக்கொள்ளப்படும். அவைகள் தமிழில் சொந்தக் கையெழுத்தாக, வயது, பாஸ்பண்ணின வகுப்பு முதலிய விபரங்கள் எழுதப்பட்டு நாலணா ஸ்டாம்புகளுடன் நர்ஸிங் சூப்பரின்டென்டென்டுக்கு அனுப்பப்பட வேண்டும் என்று கனம் டாக்டர் ஜோன்ஸ் அம்மாள் தெரிவிக்கிறார்கள்.